# சீதாவக பிரதேச சபை
# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 22 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்டோபர் 23 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சீதாவக பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீதாவக பிரதேச சபை நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்குகளில் காணப்பட்ட கணக்கீட்டு வழுக்கள், வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழேயுள்ள அட்டவணையில் காணப்படுகின்றன.

| | | கணக்குகளில் தாக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருவாய் | | செலவினம் | | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
| | | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா '000 | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா '000 | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா '000 | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா '000 |
| (அ) | கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாமை | 01 | 05 | 01 | 54 | - | - | - | - |
| (ஆ) | பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | - | - | - | - | 02 | 452 | - | - |
| (இ) | பிற | - | - | - | - | - | - | 01 | 16,358 |

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மூன்று கணக்கீட்டு விடயங்களது கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,673,960 ஆகும். உப பதிவேடுகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 55,064,817 ஆகும்.

### 1.3.3 தீர்த்து வைக்கப்படாத கணக்குகள்

ஏறக்குறைய 10 ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 1,129,821 மீளாய்வாண்டிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

### 1.3.4 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது கூட்டுத்தொகை ரூபா 111,193,414 ஆகும். அதன்பொருட்டுக் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட வைப்புகளாகிய ரூபா 16,300,990 சபையின் வருவாயிலிடப்படுவதற்கோ அல்லது திருப்பிச் செலுத்தப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 20,687,666 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 19,526,771 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,684,184 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் நிலுவையாக உள்ள வருவாய் என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதியம் |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 11,274 | 11,832 | (558) |
| (ii) | குத்தகை வாடகை | 13,846 | 15,205 | (1,359) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,992 | 1,379 | (613) |
| (iv) | பிற வருவாய் | 14,055 | 14,492 | (437) |

சமர்ப்பிக்கப்பட்ட புள்ளி விபரம் கணக்குகளுடன் இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட வருவாய் மற்றும் செலவினம் என்பன உள்ளபடியான வருவாய் மற்றும் செலவினம் என்பவற்றுடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் குறிப்பிடத்தக்க

வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு,செலவுத் திட்டம் பயனுள்ள முகாமைத்துவச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி நடைமுறைக் கணக்கினது மீதி ரூபா 12,708,798 ஆகும். எவ்வாறாயினும், மேலதிக காசு மீதியை குறுகிய கால முதலீட்டிலேனும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நெனசல நிலையத்தின் நடவடிக்கைகள் 2011 மே மாத்தின் பின்னர் செயலற்றிருந்தமை 2011 டிசெம்பர் 07 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின் போது புலனாகியது, 18 மாணாக்கர் கணனிக் கற்கை நெறிக்கு கற்கை நெறிக் கட்டணமாக ரூபா 37,950 கொடுப்பனவு செய்திருந்தனர். சபை விரிவுரைகளுக்குக் கட்டணமாக ரூபா 23,400 கொடுப்பனவு செய்திருந்தது.

(இ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 53,662,546 ஆகும். இதில் 86 சதவீதம் அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்படவேண்டியதாகும்.

(ஈ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைப் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய ஒன்றிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

(உ) வைப்பிலிடப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துவிட்ட வைப்புகளாகிய ரூபா 3,329,633 தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(3) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு நடைபெறாததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவும் செயற்படுத்தப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) கையிருப்புக் கட்டுப்பாடு